## 2) வினைச் சொற்கள்

**செயலைக் குறிக்கும் சொற்கள் இவை. (எ.கா = படி, நடி, ஓடு, செய், எழுது, அமர், எழு, தடு, கொடு)**




**அ) வினைச் சொற்கள் தன்வினை, பிறவினை என்று இரண்டு வகைப்படும். தன்வினை என்பது தானே செய்யும் வினை (அவள் ஓடினாள், அவன் மனம் திருந்தினான்) பிறவினை என்பது பிறரைக் கொண்டு செய்விக்கும் வினை ( அவள் ஊர்தியை ஓட்டினாள், அவன் நண்பனின் மனத்தைத் திருத்தினான்)**
தன்வினை பிறவினை (எழும்பு - எழுப்பு, உருள் - உருட்டு, குளி - குளிப்பாட்டு, செய் - செய்வி, படி - படிப்பி)

**ஆ) வினைச் சொற்கள் செய்வினை, செயப்பாட்டுவினை என்று இரண்டு வகைப்படும். செய்வினை என்பது அந்த வினையை அவனே செய்வது ( அழகன் புலியைத் தாக்கினான் ) செயப்பாட்டு வினை என்பது அந்த வினை மற்றவரால் செய்யப்பட்டது ( அழகன் புலியால் தாக்கப்பட்டான் - அதாவது புலி அழகனைத் தாக்கியது )**

**இ) வினைச் சொற்கள் முற்றுவினை (வினைமுற்று) என்றும் எச்சவினை ( வினையெச்சம், பெயரெச்சம் ) என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.**

**வினைமுற்று என்பது வினை அல்லது செயல் முடிந்ததைக் கூறுவது. வினை முடிந்து இருந்ததால் அது வினை முற்று. இது மூன்று வகைப்படும். காலத்தின் அடிப்படையில் இவை கடந்தகாலம் (நடந்தான்), நிகழ்காலம் (நடக்கிறான்), எதிர்காலம் (நடப்பான்) என்று மூன்று வகைப்படும்.**

**எச்ச வினை என்பது வினையெச்சம், பெயரெச்சம் என்று இரு வகையாகக் காணப்படும். இங்கு வினையானது முடிவு பெறாமல் தொங்கி நிற்கும்.**

**வினையெச்சம் என்பது வினை முற்றுப் பெறாமல் இருப்பதைக் குறிப்பது (அவன் படிக்கச் சென்றான், அவன் உண்ணச் சென்றான், அவர் உறங்கச் சென்றார்) எடுத்துக்காட்டில் உள்ள படிக்க, உண்ண, உறங்க என்கிற சொல்லில் வினை முற்றுப் பெறாமல் இருக்கிறது. அருகில் உள்ள சென்றான், சென்றார் என்பது வினைச் சொல். வினைச் சொல்லின் முன்னே முற்றுப் பெறாத வினைச் சொற்கள் இருப்பதால் இவை வினையெச்சங்கள்.**

**பெயரெச்சம் என்பது பெயர்ச் சொல்லுக்கு முன் உள்ள வினை முற்றுப் பெறாமல் இருக்கும் (அழகன் கற்ற பாடம், அழகி நடித்த படம், அவன் கட்டிய வீடு) எடுத்துக்காட்டில் உள்ள கற்ற, நடித்த, கட்டிய என்கிற சொல்லில் வினை முற்றுப் பெறாமல் இருக்கிறது. பாடம், படம், வீடு என்பவை பெயர்ச் சொற்கள், இவற்றுக்கு முன் உள்ள வினைச் சொல் முற்றுப் பெறாமல் இருப்பதால் இவை பெயரெச்சம் என அழைக்கப்பட்டன.**

## 3) இடைச் சொற்கள்

இடைச் சொற்கள் என்பவை பெயர்ச் சொற்கள் வினைச் சொற்கள் போலத் தனித்து நிற்கும் ஆற்றல் இல்லாதவை.

இவை பெயர்ச் சொற்களையும், வினைச் சொற்களையும் சார்ந்து வரக்கூடிய சொற்களாகும்.

இவை வேற்றுமை உருபுகள், (பல்+ஐ+பிடுங்கினான்)

விகுதி உருபுகள், (படி+ப்+ப்+ ஆன்)

இடைநிலை உருபுகள், (அறி+ஞ்+அன்)

சாரியை உருபுகள்,(உன்+ட்+அன்+அன்)

உவம உருபுகள், (புலி போலப் பாய்ந்தான்)

தமக்குரிய பொருளை உணர்த்தி வருபவை, (ஏ, ஓ, உம்= அவனே, முருகனோ, செந்திலும்)

ஒலி, அச்சம், விரைவு குறிப்பால் உணர்த்துபவை, (ஒல்லென ஒலித்தது)

இசைநிறையே பொருளாக வருபவை,

அசை நிலையே பொருளாக நிற்பவை - என ஒன்பது வகைப்படும்.

## 4) உரிச் சொற்கள்

உரிச் சொற்கள் என்பவை பா வகைகளில் மட்டுமே வழக்கில் உள்ளன.

பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றைச் சார்ந்து நின்று அவற்றின் தன்மையைச் சிறப்பிக்கும் சொல் உரிச் சொல்லாகும். உரிச்சொற்கள் இரண்டு வகையாக உள்ளன. செய்யுள்களில் மட்டுமே இவை பயன்படுத்தப்படுகின்றன.

இது ஒரு குணம் தழுவிய பல உரிச் சொல் என்றும், (மிகுதி என்னும் பொருளில் சால, உறு, தவ, நனி. கூ.ர், கழி என்று பல சொற்கள் வருகின்றன),

பலகுணம் தழுவிய ஓர் உரிச்சொல் என்றும் (கடி என்னும் உரிச்சொல் 13 பொருளைத் தருகின்றது காவல், கூர்மை, நறுமணம், விளக்கம், புதுமை, ஒலித்தல், விலக்கல், திருமணம், காரம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி எனப்பல பொருள்களில் செய்யுளில் வரும்) இரண்டு வகையாக உள்ளன.

ஆக தமிழ்ச் சொற்கள் என்பவை

1) பெயர்ச் சொல் 2) வினைச் சொல் 3) இடைச் சொல் 4) உரிச் சொல் என 4 வகைகளாக உள்ளன.

சொற்களைப் பற்றித் தெளிவாகப் புரிந்து கொண்டு, எந்தச் சொல்லை எங்கு பயன்படுத்துவது என்பதை உணர்ந்து, சரியாகப் பயன்படுத்தினால் பிழை வராது. இந்த நோக்கில் தான் சொற்கள் பற்றிய அறிமுகமும், விளக்கமும், இந்தப் பயிற்சியில் இணைக்கப்பட்டுள்ளன.

# சொல்லைப் பிரித்தலும் பொருள் உணர்தலும்

தமிழில் சில சொற்களைப் பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும்.

பெயரேடு = பெயர் + ஏடு

பெரியவன் = பெரிய + அவன்

ஏழூர் = ஏழ் + ஊர்

நல்லூர் = நன்மை + ஊர் (நல்ல ஊர்)

மூவுலகு = மூ + உலகு (மூன்று உலகு)

அறிஞன் = அறி + ஞ் + அன் (அறிவை உடையவன்)

கலைஞன் = கலை + ஞ் + அன் (கலை அறிந்தவன் )

பாற்சோறு = பால் + சோறு

பொற்குடம் = பொன் + குடம்

சிற்றில் = சிறிய + இல் (வீடு)

நற்பெயர் = நல்ல + பெயர்

இவ்வாறு சில சொற்களைப் பிரித்துப் பொருள் அறியலாம்.

என்னாடு = எனது + நாடு

எந்நாடு = எந்த + நாடு

எண்ணாடு = எட்டு + நாடு

வெந்நீர் = வெம்மையான + நீர் ( சுடு நீர்)

வெண்ணீர் = வெண்மையான + நீர் (வெள்ளையான நீர்)

தண்ணீர் = தண்மையான + நீர் (குளிர்ச்சியான நீர்)

சில வினைச்சொற்களையும் பிரித்துப் பொருள் காணல் வருமாறு.

படித்திருக்கிறான் = படித்து + இருக்கிறான்

சென்றிருக்கிறான் = சென்று + இருக்கிறான்

படித்தறியலாம் = படித்து + அறியலாம்

உருண்டோடியது = உருண்டு + ஓடியது

கேட்டறிந்தார் = கேட்டு + அறிந்தார்

வளர்த்தெடுத்தான் = வளர்த்து + எடுத்தான்

வினைச்சொற்களைப் பகுபத உறுப்புகளாகப் பிரித்தல் வருமாறு.

படித்தான் = படி + த் + த் + ஆன்

படி = பகுதி, த் = சந்தி

த் = இறந்த காலம் உணர்த்த வரும் இடைச்சொல்,

ஆன் = ஆண்பாலைக் காட்டும் விகுதி

படிக்கிறாள் = படி + க் + கிறு + ஆள்

படி = பகுதி, க் = சந்தி

கிறு = நிகழ்காலம் உணர்த்த வரும் இடைச்சொல்

ஆள் = பெண்பாலைக் காட்டும் விகுதி

படிப்பார் = படி + ப் + ப் + ஆர்

படி = பகுதி, ப் = சந்தி

ப் = எதிர் காலத்தை உணர்த்த வரும் இடைச்சொல்

ஆர் = பலர் பாலைக் காட்டும் விகுதி

# சொற்களைப் பிரித்தலும் பொருள் உணர்தலும்

| வினைச் சொல் | நிலை | சொல் | விளக்கம் | பிரிக்கும் முறை |
|---|---|---|---|---|
| படி | காலம் | படித்தான் | கடந்த காலம் | படி + த் + த் + ஆன் |
| | | படிக்கிறான் | நிகழ் காலம் | படி + க் + கிறு + ஆன் |
| | | படிப்பான் | எதிர் காலம் | படி + ப் + ப் + ஆன் |
| | பால் | படித்தான் | ஆண்பால் | படி + த் + த் + ஆன் |
| | | படித்தாள் | பெண்பால் | படி + த் + த் + ஆள் |
| | | படிக்கிறார் | பலர்பால் | படி + த் + த் + ஆர் |
| | இடம் | படிக்கிறேன் | தன்மை | படி + க் + கிறு + ஏன் |
| | | படிக்கின்றேன் | தன்மை | படி + க் + கின்று + ஏன் |
| | | படிக்கிறாய் | முன்னிலை | படி + க் + கிறு + ஆய் |
| | | படிக்கிறார் | படர்க்கை | படி + க் + கிறு + ஆர் |
| | எண் | படிக்கிறது | ஒருமை | படி + க் + கிறு + அது |
| | | படிக்கின்றன | பன்மை | படி + க் + கின்று + அன் + அ |
| | | படிக்கிறார்கள் | பன்மை | படி + க் + கிறு + ஆர் + கள் |
| | அல் விகுதி | படித்தல் | விகுதி பெற்றது | படி + த் + த் + அல் |
| | முற்று | படித்தான் | வினை முடிந்தது | படி + த் + த் + ஆன் |
| | எச்சம் | படித்த | எச்ச வினை | படி + த் + த் + அ |

எப்படிப் பிரிப்பது என்பதை உள்வாங்கவும்

பிரித்தவை எதைச் சொல்கின்றன என நெஞ்சில் நிறுத்தவும்

உங்கள் முன் தோன்றுகிற அனைத்துச் சொற்களையும் பிரித்துப் பழகவும்